DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - CMP.No. 981/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for PW4
Defence

Name : Sudhakaran

Father Name /
Husband Name : Elumalai

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 8th April 2026.

முதண்மை விசாரணை

நான் கிளியனூரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 08.08.2025 அன்று காலை 11.30 மணியளவில் கிளியனூர் காவல் நிலையத்தில் புகார்தாரர் தணிகைவேல் புகார்தாரர் அமர்ந்திருக்கும் இடத்தில் அமர்ந்திருந்தார். அப்போது காவல் நிலைய ஆய்வாளர் கலையரசி அம்மா ஜீப்பில் வந்தார். அவர் இறங்கி செல்லும்போது தணிகைவேலை பார்த்து யாருடா

நீ இங்கு உட்கார்ந்திருக்கிறாய் என்றும் நான் வரும்போது எழுந்து வணக்கம் வைக்கமாட்டாயா என்று கேட்டார். அதற்கு தணிகைவேல் நான் செல்போனை பார்த்து கொண்டு இருந்ததால் நீங்கள் வருவதை கவனிக்கவில்லை என்று சொன்னார். அதற்கு இன்ஸ்பெக்டர் அங்கிருந்த போலீசாரிடம் இவனை தூக்கி உள்ளே வையுங்கள் இவனை ரிமாண்ட் செய்யவேண்டும் என்று சொன்னார். அதற்கு தணிகைவேல் நான் என்ன தப்பு செய்தேன். நீங்கள் வருவதை நான் பார்க்கவில்லை என்றும் அதற்கு என்னை ஏன் ரிமாண்ட் செய்யபோகீறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர் நீ என்னையே இப்படி பேசுகிறாயா உன்னை என்ன செய்கிறேன்பார் என்று சொன்னார். என்னை யாரும் எதுவும் செய்யமுடியாது உன்னை ஒரு வழி பண்ணுகிறேன் பார் என்று சொன்னார். நான் அங்கு விபத்து வழக்கு சம்மந்தமாக அங்கு சென்றிருந்தபோது இப்படி நடந்தது. அதை நான் பார்த்தேன்.

Sd/- XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.